# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 39/மா/2025

**நாள்: 08.05.2025**

| | | |
|---|---|---|
| திரு. முகமது ஆசிக். ஹை.<br>கோயம்புத்தூர் | --- | முறையீட்டு மனுதாரர் |
| உதவி ஆணையர்<br>மத்திய மண்டலம்,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி | --- | எதிர் மனுதாரர் |

கோயம்புத்தூர், தெற்கு உக்கடம், G.M. நகர், எண் 307 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. முகமது ஆசிக். ஹை. என்பவரின் 30.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.12.2024 அன்று பெறப்பட்டு 39/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

கோயம்புத்தூர், தெற்கு உக்கடம், G.M. நகர், எண் 307 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. முகமது ஆசிக். ஹை. தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் 84 ஆவது வார்டு பகுதிக்கு உட்பட்ட ஜி.எம்.நகர் புல்லக்காடு பகுதியில் ராஜ வாய்க்கால் புறம்போக்கு நிலத்தில் கோவை மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் கடந்த 28/02/2023, 26,00,000/– சமுதாய கழிப்பிடம் அமைப்பதற்கு உண்டான டெண்டர் 634/2023 Tender ID2023-MAWS-294257-3 அறிவிக்கப்பட்ட 2023 மார்ச் மாதம் அப்பணி துவங்கப்பட்டது.

ஜி.எம்.நகர் புல்லுக்காடு சாலையில் ராஜ வாய்க்கால் பகுதியில் பல ஆண்டுகளுக்கு மேலாக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் வாய்க்கால் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர். பெரும்பான்மையான நபர்களின் வீடுகளில் கழிப்பிட வசதி இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் ஏற்கனவே சமுதாய கழிப்பிடம் ஒன்று செயல் பட்டு வந்தது.

கடந்த 2018 ஆம் ஆண்டு கோவை மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்டெடுக்கும் நடவடிக்கை நடைபெற்றது. இதில் மேற்கண்ட பகுதியில் ஆக்கிரமிப்புகளில் தங்கியிருந்த வீடுகள் முறைப்படி குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகள் வழங்கப்பட்டு காலி செய்ய வலியுறுத்தப்பட்டது. அங்கு இருந்த பொது மக்களும் அரசாங்கத்தின் கோரிக்கை ஏற்று வீடுகளை காலி செய்து ஆக்கிரமிப்பில் இருந்த வீடுகள் புல்டோசர் மூலம் அப்புறத்தப்பட்டது. அங்கிருந்த பழைய சமுதாய கழிப்பிடம் இடிக்கப்படாமல் செயல்பாட்டில் இருந்தது.

புல்லுகாடு பகுதியில் வசித்த பொதுமக்கள் தாங்கள் தங்கியிருந்த ஆக்கிரமிப்பு பகுதியில் இருந்து சென்றுவிட்டதால் நாளடைவில் அக்கழிப்பிடம் பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் பராமரிப்பு இல்லாமல் இருந்து வந்தது.

கழிப்பிடத்தில் சமூக விரோதிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கஞ்சா மது மற்றும் விபசாரம் போன்ற சமூக சீர்கெழிவுகள் நடைபெற்று வந்தது. அப்பகுதியில் இருந்த சில சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் ஒருங்கிணைத்து காவல் துறையிடம் புகார் அளித்து மாநகராட்சி இடம் கோரிக்கை வைத்த அடிப்படையில் பழைய பொது கழிப்பிடம் மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் இடித்து தரமாட்டமாக்கப்பட்டது.

அப்பகுதியில் பொதுமக்கள் யாரும் தங்களுக்கு கழிப்பிடம் வேண்டுமென கோரிக்கை வைக்கவில்லை. இருந்த போதும் கடந்த 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பழைய சமுதாய கழிப்பிடம் இருந்த இடத்தில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி நடைபெற்று வந்தது.

கடந்த 2024 ஆண்டு மார்ச் மாதம் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி நிறைவடைந்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து விடாமல் இருந்தது. சம்பந்தப்பட்ட மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர் தொடர்பு கொண்டு சமுதாயக் கழிப்பிடம் ஏன் இனி மக்கள் பயன்பாட்டிற்கு வரவில்லை என்று கேட்டபோது அவர்கள் சரியான முறையில் பதில் அளிக்கவில்லை. எனவே, தமிழக முதலமைச்சர் தனிப்பிரிவில் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து 21.11.2024 அன்று சமுதாய கழிப்பிடத்தை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து விடுங்கள் என்று கோரிக்கை முன் வைத்திருந்தோம். கடந்த 20.12.2024 அன்று மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் பதில் மனு அழைக்கப்படுகிறது.

அந்த மனுவில் கடந்த மார்ச் மாதம் 2024 முதல் மேற்கண்ட சமுதாய கழிப்பிடம் மக்கள் பயன்பாட்டிற்காக வந்து விட்டது என கூறினார். கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் 84 வது வார்டு உதவி பொறியாளர் அவர்களை தொடர்பு கொண்டு,, மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தின் பராமரிப்பாளர் யார் என்று கேட்ட போது 84வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்களின் பராமரிப்பில் உள்ளது என கூறினர்.

புல்லுக்காடு பகுதியில் அமைந்திருந்த சமுதாய கழிப்பிடம் சுமார் 26 ரூபாய் லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது என மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து கடந்த 28.10.2024 அன்று சமுதாய கழிப்பிடம் குறித்து கீழ்க்கண்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரி விண்ணப்பித்திருந்தேன். தற்போது வரை அதற்குண்டான தகவல் கிடைக்கவில்லை. அதற்காக மேல்முறையீடும் செய்திருந்தேன். அதற்குண்டான பதில் மனுவும் வழங்கப்படவில்லை.

29.12.2024 அன்று சமுதாய கழிப்பிடத்தை பார்வையிட சென்றபோது மிகப்பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. என்னவென்றால் புள்ளக்காடு பகுதியில் அமைக்கப்பட்ட சமுதாய கழிப்பிடத்தில் பணிகள் முழுமையாக முடிவு பெறவில்லை. கழிப்பிடத்தில் குழாய்கள் மற்றும் பைப்புகள் பதிக்கப்படவில்லை. கழிப்பிடத்தில் மின்சார வசதி மற்றும் மின் இணைப்புகள் கிடையாது. கழிப்பிடத்தில் மின்சார வசதி மற்றும் மின் இணப்புகள் கிடையாது. கழிப்பிடத்தில் வருவோர்கள் பயன்படுத்தும் நீர் வசதியும் கிடையாது. கழிப்பிடம் வெறும் கட்டிடமாக மட்டுமே உள்ளது. அதில் பேஷன் பதிக்கப்பட்டு இருக்கிறது. ஒருசில இடங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முறையாக மின்இணைப்பு அல்லது நீர் இணைப்பு கிடையாது. கழிப்பிடம் வெறும் கட்டிடமாக மட்டுமே உள்ளது. பணிகள் முடிவு பெறாமல் கழிப்பிடத்தை திறந்து வைக்கும் மக்கள் பயன்படுத்த முடியாத பணிகளை மேற்கொண்டு உள்ளார்கள். மேற்கண்ட கழிப்பிடத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமே கிடையாது. அவ்வாறு இருக்கும் போது எப்படி பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்கிற கேள்வி எழுகிறது.

அதுமட்டுமின்றி இந்த கட்டிட பணியில் மிகப்பெரிய முறைகேடு மற்றும் ஊழல் நடைபெற்றுள்ளது. மேற்கண்ட கழிப்பிடத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதியின் கண்காணிப்பில் பணி நடந்துள்ளது.

எவ்வாறு பணிகள் முடிவடையாமல் மக்கள் பயன்பாட்டிற்கு அரசு அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதி அதை கொண்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம் என்கிற கேள்வி எழுகிறது. மேற்கண்ட கழிப்பிடத்தில் மிகப் பெரிய ஊழல் மற்றும் முறைகேடு நடந்துள்ளது என்பது இதன் மூலம் தெரிய வருகிறது. தாங்கள் எனது புகார் மனுவை ஏற்றுக்கொண்டு விசாரணை நடத்தி தனது பணியை சரியான முறையில் மேற்கொள்ளாத அரசு அதிகாரிகள், அரசு ஊழியர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 18.02.2025 நாளிட்ட அறிவிக்கை மூலம் கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், உதவி ஆணையர் தனது 14.03.2025 நாளிட்ட அறிக்கையில்:

"கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண்.84, ஜி.எம்.நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கென தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.26 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆணை நாள் 13.07.2022–ன்படி, நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, மைய அலுவலகத்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் டெண்டர் நாள் 15.03.2023 அன்று பெறப்பட்டுள்ளது. இதில் மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்தர்தாரர் திரு.A.விஜயகுமார் அவர்களுக்கு 24.03.2023 அன்று மாநகர பொறியாளரால் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பணி துவங்குவதற்கு முன், ஒப்பந்தப் பத்திரம் தயார் செய்யப்பட்டு 09.06.2023 அன்று நிர்வாக பொறியாளர் ஒப்புதல் பெறப்பட்டு, அன்றே பணி ஸ்தலத்தில் துவங்கப்பட்டது. பணி நடைபெறும் போது, கள ஆய்வு செய்யப்பட்டு, பணியின் அளவீடு விவரங்கள், அளவீட்டு புத்தகத்தில் எழுதப்பட்டு, உதவி நிர்வாக பொறியாளர் மற்றும் நிர்வாக பொறியாளர் அவர்களால் ஸ்தலத்தில் சரி பார்க்கப்பட்டுள்ளது. பணியின் போது பணிகளை அவ்வப்போது உதவி செயற் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. 12.12.2023–ல் அன்று பணி முடிக்கப்பட்டு செலவினப் பட்டியல் தயார் செய்யப்பட்டு, வரைவாளரால் சரிபார்க்கப்பட்டு, உதவி நிர்வாக பொறியாளர், நிர்வாக பொறியாளர் மற்றும் மாநகராட்சி தலைமை பொறியாளர் ஆகியோரது ஒப்புதல் வழங்கப்பட்டு, மைய அலுவலக கணக்குப்பிரிவின் மூலம் பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மத்திய மண்டல அலுவலகத்தில் உதவி ஆணையாளரால் பட்டியல் ஏதும் வழங்கப்படவில்லை. கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண் 528 நாள் 13.09.2024–ன்படி மத்திய மண்டலம், வார்டு எண் 31, 32, 65, 70, 82 மற்றும் 84–க்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 10 எண்ணிக்கை பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்களை ஒரு வருட காலத்திற்கு பராமரித்தில் பணிக்கு, 31.10.2024 வரை கால நீட்டிப்பு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண் 84–க்குட்பட்ட ஜி.எம். நகர் சமுதாய கழிப்பிடம் ஒப்பந்ததாரர் திரு. கே. கோவிந்தராஜ் அவர்களால், கழிப்பறை பராமரிப்புக்கு ஆட்கள் நியமித்து பராமரிக்கப்பட்டது.

மாமன்ற தீர்மான எண் 653, நாள் 30.12.2024–ன்படி, வார்டு எண்.65, 84ல் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடத்தை பராமரிக்க மதிப்பீடு ரூ.5.20 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முதலாம் அழைப்பில் ஒப்பந்ததாரர் யாரும் விலைப்புள்ளி அளிக்காததால், இரண்டாம் அழைப்பு 20.03.2025 அன்று கோரப்பட உள்ளது. எனவே பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கும் வரை சமுதாய கழிப்பிடத்தினை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சமுதாய கழிப்பறையில், சமூக விரோதிகள் சிலரால், புதிதாக பொருத்தப்பட்டுள்ள Stainless Steel குழாய்கள் திருடப்பட்டன. கழிப்பறையின் முகப்பில் உள்ள UPVC ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. மேற்கூரையில் அமைக்கப்பட்ட PVC தொட்டி இரண்டும் உடைக்கப்பட்டது. இதனால், கழிப்பறையில் பயன்பாட்டிற்கு தண்ணீர் வரவில்லை. ஆகையால், மக்களின் பயன்பாட்டில் சிரமத்தை தவிர்க்க, புதிதாக PVCகுழாய்கள் , புதிய ஜன்னல் கண்ணாடி, புதிய PVC Tank ஒப்பந்ததாரரால் மீண்டும் பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு உள்ளது. மேலும், இதில் உள்ள விளக்குகள் மற்றும் மின் சாதனங்கள் பயன்பாட்டில் உள்ளது.

மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தின் அருகிலுள்ள மாநகராட்சி இடத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் ஒப்பந்ததாரரால் (M/s.APR Constructions) நடைபாதை அமைக்கும் பணி நடைபெறும் போது, திரு.ஐதர் அலி (மனுதாரர் முகமது ஆசிக்–ன் தந்தை) என்பவர் பூங்காவின் சுவற்றை இடித்து, சேதப்படுத்தி பிரச்சனை செய்தார். அவர் மீது, ஒப்பந்ததாரர் திரு.ராஜ்குமார் (M/s.APR Constructions) காவல் துறையில் புகார் மனு அளித்துள்ளார். அதன் பேரில் காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டு திரு.ஐதர் அலி மீது முதல் தகவல் அறிக்கை FIR 185 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திரு. ஐதர் அலி என்பவர் தற்போது இப்புகார் அளித்துள்ள திரு. முகம்மது ஆசிக் என்பவரின் தந்தை ஆகும்.

மேற்காணும், கழிப்பிடம் தற்போது முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட பின், ஒப்பந்ததாரரால் முறையாக பராமரிப்பு செய்திடுவதை மாநகராட்சியினால் உறுதி செய்யப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்நேர்வு தொடர்பாக பணி நடைபெறும் போது ஆய்வு செய்யப்பட்ட புகைப்படங்கள், பணி முடிவடைந்த போது இருந்த பொருத்தப்பட்ட பொருட்கள், புகைப்படங்கள், பொருட்கள் திருடப்பட்ட பின் திரும்பவும் ஒப்பந்ததாரர் மூலம் PVC பொருட்கள் பொருத்திய புகைப்படங்கள், மின்விளக்குகள், ஒளிரும் புகைப்படங்கள், கழிப்பிடம் பயன்பாட்டில் உள்ள புகைப்படங்கள், கோப்பு நகல்கள், மனுதாரரின் தந்தை மீது பதியப்பட்ட FIR நகல் ஆகியவை மாண்பமை முறைமன்ற நடுவத்தின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, மனுதாரர் உள்நோக்கத்துடன் தவறாக அளித்துள்ள புகார் மனுவினை தள்ளுபடி செய்திட மாண்பமை முறைமன்ற நடுவத்தினை பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 15.04.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 15.04.2025 அன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. மனுதாரருக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட்ட அழைப்பாணை "Not claimed" என்ற அஞ்சலக குறியீட்டுடன் திரும்ப பெறப்பட்டது. மனுதாரரின் கைபேசி எண் மூலமாக தொடர்பு கொள்ளப்பட்டது.

ஆனால், கைபேசி எண் உபயோகத்தில் இல்லை என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் மனுதாரர் படிவம் 1–ல் அளித்த மின்னஞ்சல் முகவரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் முகவரி தவறானது என திரும்பப் பெறப்பட்டது.

6. கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 15.04.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண்.84, ஜி.எம்.நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கென தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.26 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஆணையின்படி நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு, மைய அலுவலகத்தால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.A.விஜயகுமார் அவர்களுக்கு 24.03.2023 அன்று மாநகர பொறியாளரால் வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பணி துவங்குவதற்கு முன், ஒப்பந்தபத்திரம் தயார் செய்யப்பட்டு 09.06.2023 அன்று நிர்வாக பொறியாளர் ஒப்புதல் பெறப்பட்டு, அன்றே பணி ஸ்தலத்தில் துவங்கப்பட்டது. பணி நடைபெறும் போது, கள ஆய்வு, பணியின் அளவீடு விவரங்கள், அளவீட்டு புத்தகத்தில் எழுதப்பட்டு , உதவி நிர்வாக பொறியாளர் மற்றும் நிர்வாக பொறியாளர் அவர்களால் ஸ்தலத்தில் சரி பார்க்கப்பட்டுள்ளது. பணிகளை மேற்பார்வையிட உதவி பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆய்வு செய்யப்பட்டு 12.12.2023ல் பணி முடிக்கப்பட்டு செலவின பட்டியல் தயார் செய்து, வரைவாளரால் சரிபார்க்கப்பட்டு, உதவி நிர்வாக பொறியாளர், நிர்வாக பொறியாளர் மற்றும் மாநகராட்சி தலைமை பொறியாளர்ஆகியோர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டு, மைய அலுவலக கணக்குப்பிரிவின் மூலம் பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த பணிக்கு மத்திய மண்டல அலுவலகத்தில் உதவி ஆணையாளரால் பட்டியல் ஏதும் வழங்கப்படவில்லை.

மாமன்ற தீர்மான எண்.653, வார்டு எண்.65, 84ல் உள்ள கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடத்தை பராமரிக்க மதிப்பீடு ரூ.5.20 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் முதலாம் அழைப்பில் ஒப்பந்ததாரர் யாரும் விலைப்புள்ளி அளிக்காததால், இரண்டாம் அழைப்பு 20.03.2025 அன்று கோரப்பட்டுள்ளது. எனவே பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கும் வரை சமுதாய கழிப்பிடத்தினை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், சமுதாய கழிப்பறையில், சமூக விரோதிகள் சிலரால், புதிதாக பொருத்தப்பட்டுள்ள Stainless Steel குழாய்கள் திருடப்பட்டன. கழிப்பறையின் முகப்பில் உள்ள UPVC ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. மேற்கூரையில் அமைக்கப்பட்ட PVC தொட்டி இரண்டும் உடைக்கப்பட்டன. இதனால் கழிப்பறையில் பயன்பாட்டிற்கு தண்ணீர் வர இயலவில்லை. மக்களின் பயன்பாட்டில் சிரமத்தை தவிர்க்க புதிதாக PVC குழாய்கள், புதிய ஜன்னல் கண்ணாடி, புதிய PVC Tank ஒப்பந்ததாரரால் மீண்டும் பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேற்படி கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு உள்ளதால், இதில் உள்ள விளக்குகள் மற்றும் மின் சாதனங்கள் பயன்பாட்டில் உள்ளது.

மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தில் அருகில் மாநகராட்சி சார்பில் ஒப்பந்ததாரர் M/s.APR Constructions நிறுவனத்தால் நடைபாதை அமைக்கும் பணி நடைபெற்று கொண்டிருந்த போது திரு.ஐதர் அலி (மனுதாரர் முகமது ஆசிக்–ன் தந்தை ) என்பவர் பூங்காவின் சுவற்றை இடித்து, சேதப்படுத்தி பிரச்சனை செய்தார். அவர் மீது ஒப்பந்ததாரர் திரு.ராஜ்குமார் (M/s.APR Constructions) காவல் துறையில் புகார் மனு

அளித்தன் பேரில் காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டு திரு.ஐதர் அலி மீது FIR முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்திற்கு முறையாக தண்ணீர் வசதி,மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. பராமரிப்பு பணிகள் நடைபெறும் போது ஆய்வு செய்யப்பட்ட புகைப்படங்கள், பொருட்கள் திருடப்பட்ட பின் திரும்பவும் ஒப்பந்ததாரர் மூலம் PVC பொருட்கள் பொருத்திய புகைப்படங்கள் மின்விளக்குகள் ஒளிரும் புகைப்படங்கள், கழிப்பிடம் பயன்பாட்டில் உள்ள புகைப்படங்கள், கோப்பு நகல்கள், மனுதாரரின் தந்தை மீது பதியப்பட்ட FIR நகல் ஆகியவை இம்முறைமன்ற நடுவர் அவர்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

தற்போது மேற்கண்ட சமுதாய கழிப்பிடம் பராமரிப்பு பணிக்காக ஒப்பந்தம் கோரப்பட்டு திருவாளர்கள் Om Sakthi Constructons என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு வரும் மாமன்ற கூட்டத்தில் முறையாக மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்படும். அதுவரை மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தின் பராமரிப்பு பணி மாநகராட்சி பணியாளர் மூலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்று இம்முறைமன்றம் முன் தெரிவித்துக் கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையரின் அறிக்கை, உதவி ஆணையர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள்ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்ட விவரங்கள் கண்றியப்பட்டன:

மனுதாரர், "கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் 84 ஆவது வார்டு பகுதிக்கு உட்பட்ட ஜி.எம்.நகர் புல்லக்காடு பகுதியில் ராஜ வாய்க்கால் புறம்போக்கு நிலத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் ரூ.26,00,000/– மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் அமைக்க, 28.02.2023 அன்று டெண்டர் விடப்பட்டு, 2023 மார்ச் மாதம் பணி துவங்கப்பட்டது எனவும், ஜி.எம்.நகர் புல்லுக்காடு சாலையில் ராஜ வாய்க்கால் பகுதியில் பல ஆண்டுகளுக்கு மேலாக பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்கள் வாய்க்கால் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டி குடியிருந்து வந்தனர் எனவும், பெரும்பான்மையான நபர்களின் வீடுகளில் கழிப்பிட வசதி இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் ஏற்கனவே சமுதாய கழிப்பிடம் ஒன்று செயல் பட்டு வந்தது எனவும், கடந்த 2018 ஆம் ஆண்டு கோவை மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் வீடுகள் வழங்கப்பட்டது எனவும், அங்கிருந்த பழைய சமுதாயக் கழிப்பிடம் இடிக்கப்படாமல் பொது மக்கள் பயன்பாட்டில் இல்லாமல் பராமரிப்பு இல்லாமல் இருந்ததால், கடந்த 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பழைய சமுதாய கழிப்பிடம் இருந்த இடத்தில் புதிதாக சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி நடைபெற்று வந்தது எனவும், கடந்த 2024 ஆண்டு மார்ச் மாதம் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி நிறைவடைந்து, கடந்த மார்ச் மாதம் 2024 முதல் மேற்கண்ட சமுதாய கழிப்பிடம் மக்கள் பயன்பாட்டிற்காக வந்து விட்டது என கூறியதாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் 84 வது வார்டு மாமன்ற உறுப்பினரின் பராமரிப்பில் உள்ளதாகவும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. ஆனால், சமுதாய கழிப்பிடத்தில் முழுமையாக பணிகள் முடிவு பெறவில்லை எனவும், இந்த கட்டிடப் பணியில் மிகப்பெரிய முறைகேடு மற்றும் ஊழல் நடைபெற்றுள்ளது எனவும், புகார் மனு மீது விசாரணை நடத்தி, மேற்கண்ட சமுதாய கழிப்பிட கட்டிடப் பணியினை மேற்கொள்ளாத அரசு அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு இம்முறை மன்ற நடுவத்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், வார்டு எண்.84, ஜி.எம்.நகர் பகுதியில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கென தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மதிப்பீடு ரூ.26.00 இலட்சத்திற்கு முறையாக ஒப்புதல் பெறப்பட்டது எனவும், பணி நடைபெறும் போது, கள ஆய்வு, பணியின் அளவீடு விவரங்கள், அளவீட்டு புத்தகத்தில் எழுதப்பட்டு, உதவி நிர்வாக பொறியாளர் மற்றும் நிர்வாக பொறியாளர் ஆகியோரால் ஸ்தலத்தில் சரி பார்க்கப்பட்டு, பணிகளை மேற்பார்வையிட உதவிப் பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் ஆய்வு செய்யப்பட்டு 12.12.2023–ல் பணி முடிக்கப்பட்டு செலவின பட்டியல் தயார் செய்து, முறையாக தலைமைப் பொறியாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு, மைய அலுவலக கணக்குப்பிரிவின் மூலம் பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது எனவும், இந்த பணிக்கு மத்திய மண்டல அலுவலகத்தின் உதவி ஆணையாளரால் பட்டியல் ஏதும் வழங்கப்படவில்லை எனவும், கழிப்பிடம் மற்றும் சமுதாய கழிப்பிடத்தை பராமரிக்க மதிப்பீடு ரூ.5.20 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளியினை பணி ஒப்பந்ததாரரிடம் ஒப்படைக்கும் வரை சமுதாய கழிப்பிடத்தினை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது எனவும், இந்நிலையில், சமுதாய கழிப்பறையில், சமூக விரோதிகள் சிலரால், புதிதாக பொருத்தப்பட்டுள்ள Stainless Steel குழாய்கள் திருடப்பட்டதாகவும், கழிப்பறையின் முகப்பில் உள்ள UPVC ஜன்னல் கண்ணாடிகள் மற்றும் மேற்கூரையில் அமைக்கப்பட்ட PVC தொட்டி இரண்டும் உடைக்கப்பட்டதாகவும், மக்களின் சிரமத்தை தவிர்க்க புதிதாக PVCகுழாய்கள், புதிய ஜன்னல் கண்ணாடி, புதிய PVC Tank ஒப்பந்ததாரரால் மீண்டும் பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், விளக்குகள் மற்றும் மின் சாதனங்கள் பயன்பாட்டில் உள்ளதாகவும், தற்போது மேற்கண்ட சமுதாயக் கழிப்பிடம் பராமரிப்பு பணிக்காக திருவாளர்கள் Om Sakthi Constructons என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, வரும் மாமன்ற கூட்டத்தில் முறையாக மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்படும் எனவும், அதுவரை மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தின் பராமரிப்பு பணி மாநகராட்சி பணியாளர் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரால் குறிப்பிடப்பட்ட சமுதாயக் கழிப்பிடத்தில் சமூக விரோதிகளால் உடைக்கப்பட்ட பொருட்கள் மீண்டும் PVCகுழாய்கள், புதிய ஜன்னல் கண்ணாடி, புதிய PVC Tank ஒப்பந்ததாரரால் புதிதாக பொருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதாலும், மேற்படி கழிப்பிடத்திற்கு மின் இணைப்பு உள்ளதால், விளக்குகள் மற்றும் மின் சாதனங்கள் பயன்பாட்டில் உள்ளதாலும், தற்போது மேற்கண்ட சமுதாயக் கழிப்பிடம் பராமரிப்பு பணிக்காக ஒப்பந்தம் கோரப்பட்டு திருவாளர்கள் Om Sakthi Constructons என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, வரும் மாமன்ற கூட்டத்தில் முறையாக மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்படும் வரை, மேற்கண்ட சமுதாய கழிப்பிடத்தின் பராமரிப்பு பணி மாநகராட்சி பணியாளர் மூலம் பராமரிக்கப்பட்டு வரும் என கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டல உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றில் தெரிவித்திருந்தாலும், மனுதாரர் சமுதாய கழிப்பிடக் கட்டிடப்

பணியில் மிகப் பெரிய முறைகேடு மற்றும் ஊழல் நடைபெற்றுள்ளது என தெரிவித்துள்ள நிலையில், இப்பொருள் தொடர்பான பட்டியல்களை எதிர்வரும் தணிக்கையின் போது சமர்ப்பித்து, அத்தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரைக் கேட்டுக் கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு மே திங்கள் 08ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ஹை. முகமது ஆசிக்,
   307, G.M. நகர்,
   தெற்கு உக்கடம்,
   கோயம்புத்தூர்–1.

2) ஆணையர்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர்.

3) உதவி ஆணையர்,
   மத்திய மண்டலம்,
   கோயம்புத்தூர் மாநகராட்சி,
   கோயம்புத்தூர்–641 018.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை–600 028.

5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை–600 028.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,

இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

9/5/25

செயலாளர்.